# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 23.05.2023 supeedsam.com supeedsam@gmail.com







# தமிழர் நிலங்களை களவெடுத்தே தையிட்டி விகாரை கட்டப்பட்டது

## ரஜமஹா விகாரையின் விகாராதிபதி அதிரடி



தையிட்டி விகாரை தமிழர் நிலங்களை களவெடுத்து கட்டிய விகாரை என்று நயினாதீவு ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருட போர் காலத்திலும் சிங்களவர்களிற்கு எவ்வித பிரச்சினையும் காணப்படவில்லை. தென் இலங்கை வாழ் மக்களுக்கு உண்மை தெரியாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஆரம்ப காலகட்டத்தில் இருந்தவர்கள் தனி தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லர் எனவும் ஈ.பி.டி.பி, டெலோ,போன்ற அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்தே

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் கல்வி துறையில் மாற்றங்களை ஏற்படுத்த முனையும் புதிய ஆளுநர்



(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாத அனைத்து குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை 30 நாட்களுக்குள் முடித்து அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாகாணத்தின் கல்வி முன்னேற்றம் குறித்து பிரதம செயலாளர், கல்வி செயலாளர், கல்வி மாகாண பணிப்பாளர், கல்வி வலய பணிப்பாளர் மற்றும் பிரதேச கல்வி அதிகாரி ஆகியோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மாகாண கல்வி வலயங்களில் உள்ள நிதிக் குற்றங்கள், பாலியல் வன்கொடுமை மற்ற அங்கீகரிக்கப்படாத நடைமுறைகள் பற்றிய அறிக்கைகளை ஒப்படைத்து வலுவான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மன்னாரில் இராணுவத்தினால் அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரை..!



மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவினால் அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த இடத்தை நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஆளுநர் செந்தில் - சுமந்திரன் சந்திப்பு!



கிழக்கின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குன் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று திங்கட்கிழமை குறித்த கலந்துரையாடல்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு பாடசாலை மாணவர்களுக்கு போலிஸார் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

மட்டக்களப்பு தலைமைய பொலிசார் பாடசாலை மாணவர்களுக்கான அறிவித்தல் எனும் தலைப்பில் நாட்டில் அண்மை காலமாக சிறுவர் கடத்தல் அதிகரித்துள்ளது எனவே பாடசாலை மாணவர்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் கொண்ட துண்டுபிரசுரம் ஒன்றை

02 ஆம் பக்கத்தில்...

## கனடாவின் கருத்துக்கு ஜனாதிபதி மௌனம் காப்பது ஏன்..?

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் இனப்படுகோலை நடந்தது உண்மையே; கனேடியப் பிரதமரின் அறிக்கை சரியானது!



''இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை

02 ஆம் பக்கத்தில்...











## இலங்கையில் நடந்தது இனப்படுகோலை அல்ல!; கனேடியப் பிரதமரின் கூற்றை அடியோடு நிராகரிக்கிறார் மஹிந்த

'போரில் துரதிர்ஷ்டவசமாக பொதுமக்கள் சாவடைந்தனர். அதற்காக இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.'- இவ்வாறு இறுதிப்போரின் போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'மே 18ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை கனேடிய நாடாளுமன்றம்

02 ஆம் பக்கத்தில்...

# மூன்று மாதங்கள் கடந்தும் சரிசெய்யப்படாத கணனி இயந்திரம்





(எப்.முபாரக்)

கந்தளாயிலிருந்து கொழும்புக்கு செல்வதற்கு புகையிரத ஆசனம் முன்பதிவு செய்யச் சென்றால் கணனி இயந்திரம் பழுதடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாக பழுதடைந்துள்ள இவ்வியந்திரம் இன்னமும் சரிசெய்யப்படாததால் தம்பலாகாமம் அல்லது திருகோணமலைக்குச் செல்லுமாறு பொறுப்பற்ற விதத்தில் புகையிரத அதிபர் தெரிவிக்கின்றனர்.

இதனால் வான்எல, கந்தளாய், பேராறு அக்போபுர, மற்றும் வாத்தியாகம போன்ற பகுதிகளிலிருந்து கொழும்புக்கு செல்லுகின்ற பயணிகள் ஆசனங்களை முன்பதிவு செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புகையிரத முன்பதிவுகளை மேற்கொள்வதாக இருந்தால் நாற்பது கிலோ மீற்றர்களை தாண்டி திருகோணமலைக்குச் செல்ல வேண்டும் இதனால் பல ரூபாய்களை செலவு செய்து செல்ல வேண்டியதாகவுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் பொது மக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

# விகாரைகளை நிறுவும் இராணுவம் பாடசாலைகளை அமைக்க முன்வர வேண்டும்

## அங்கஜன் எம்.பி வேண்டுகோள்

(த.சுபேசன்)

விகாரைகளை நிறுவும் இராணுவத்தினர் பாடசாலைகளை அமைக்க முன்வர வேண்டுமென யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் வரணி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கட்டிட திறப்புவிழா நிகழ்வில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அனுமதி இன்றி அத்துமீறி அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் பூதாகரமாக வெடித்திருந்தது. அப்போது நான் கூட இராணுவம் இன முறுகலைத் தூண்டுகிறது என்று கூறியிருந்தேன்.

ஆனால் இன்று வரணியில் இராணுவம் முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளது. வரணி ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடனும் - இராணுவத்தின் சரீர உழைப்புடனும் வரணி மத்திய கல்லூரியின் வகுப்பறைக் கட்டடங்கள் மீள புனரமைக்கப்பட்டுள்ளன.



இதற்காக இராணுவத்தினர் 1600மனித வலுவினை அர்ப்பணித்துள்ளனர். இந்த சரீர உதவி வரணி ஒன்றியத்தின் நிதிக்கு மூன்று மடங்கு வலுச்சேர்த்துள்ளது.

நாம் மறுபடியும் செங்கல் செங்கல்லாக எமது வாழ்வை கட்டியெழுப்ப முயற்சிக்கும் இத் தருணத்தில் கிடைத்திருக்கும் இந்த உதவியை பாராட்டாமல் இருக்க முடியாது. இதுபோன்ற முன்னுதாரணமான செயற்பாடுகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ள வேண்டும்.

எங்கள் மக்கள் மறுபடியும் இழந்ததை அடைய வேண்டுமானால் பொருளாதார ரீதியாக பலமடைய வேண்டும். பொருளாதார ரீதியாக பலமடைய கல்வியை ஆயுதமாக எடுக்க வேண்டும். கல்வி மேம்பாட்டிற்கு உதவி செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் மற்றும் முயற்சி ஆகிய செயற்பாடுகள் பாராட்டுதற்குரியவை.

அரசியல்வாதிகள் மற்றும் மாகாண சபைகள் மேற்கொள்ள வேண்டிய பல வேலைத்திட்டங்களை வரணி ஒன்றியம் தமது பிரதேசத்தில் முன்னெடுத்து வருகின்றனர். குறைந்து வருகின்ற பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்காக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை கூட வரணி ஒன்றியம் முன்னெடுக்கவிருப்பதாக மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் போது மக்களுக்கான நடமாடும் சேவைகள்

(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் பிரதேச பொது மக்களின் நலன் கருதி ஒரு நாள் நடமாடும் சேவை நேற்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று இருந்தன.

இவ் நடமாடும் சேவையானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்று இருந்ததுடன் இங்கு சுமார் 19க்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் பங்கு கொண்டு இருந்தன.

அந்தவகையில் பிறப்பு இறப்பு விவாகப் பத்திரங்கள் காலம் கடந்த உத்தேச பிறப்பு சான்றிதழ்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் காணி பிணக்குகள் காணி அளிப்புக்கள் சமுர்த்தி தொடர்பான சேவைகள் அனர்த்த முகாமைத்துவ சேவைகள் பொலிஸ் முறைப்பாடுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு திணைக்களச் சேவைகளள் பெண்கள் சிறுவர் மகளிர் பிரிவு சேவைகள் கல்வி சுகாதாரம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு போன்ற சுமார் 19 திணைக்களங்களில் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளும் வகையில் இவ் நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டு இருந்தன.





இவ் நடமாடும் சேவையின் ஊடாக பொது மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு அதிகாரிகளினால் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் பொது மக்கள் மற்றும் பாடசாலைகள் சுகாதார திணைக்களங்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இவ் நடமாடும் சேவையில் உதவி பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் அனோஜா உஷாந் கணக்காளர் எம்.அரசரெத்தினம் மறறும் பொலிஸ் கல்வி சுகாதாரத் திணைக்ளத் தலைவர்கள் அரச திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு பொது மக்களுக்கான சேவையை வழங்கி இருந்தனர்.

## ஆளுநர் செந்தில் - சுமந்திரன் சந்திப்பு!

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது

இதன்போது கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தது.

## மன்னாரில் இராணுவத்தினால் அமைக்கப்பட்டு

தொடர்ச்சியாக, மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகளே காரணங்களாக உள்ளன.

மன்னாரில் 5 பௌத்த விகாரைகள் உள்ளன. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், செளத்பார், தலைமன்னார் ஆகிய இடங்களில் அவை உள்ளன.

ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் ஐம்பது கூட இல்லை. பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து வருகிறது

## இலங்கையில் இனப்படுகொலை...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ளமையைக் கண்டிக்கின்றோம். அலி சப்ரியின் பதிலை நாம் உதாசீனம் செய்கின்றோம்.– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

‘மே 18ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையைக் கனேடிய நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது’ – என்று அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கைக்கு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கண்டனம் வெளியிட்டதுடன் அதனை நிராகரித்துமிருந்தார். இவை தொடர்பில் இரா.சம்பந்தனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. அது இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களுக்கும் தெரியும். இலங்கையில் போர் உக்கிரமடைந்த காலத்திலும், போர் முடிவுக்கு வந்த காலத்திலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. அதை மறுக்கும் தற்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அப்போது அமைச்சராக இருக்கவில்லை.

உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அலி சப்ரியின் பதிலை நாம் உதாசீனம் செய்கின்றோம். அது பெறுமதியற்ற நிராகரிப்பு.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத் தீர்மானங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. பல்வேறு விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை இலங்கை அரசு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையைச் செய்யவில்லை. வெளிநாட்டு விசாரணைக்கும் இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. உள்நாட்டு விசாரணையையும் நடத்தவில்லை.

ஏன் உள்நாட்டு விசாரணை இல்லை? என்ன காரணத்துக்காக உள்நாட்டு விசாரணை இல்லை? உள்நாட்டில் பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணையை இலங்கை அரசு இதுவரை நடத்தவேயில்லை. அதிலிருந்து தாங்கள் செய்தது குற்றம்; விசாரணை நடத்தினால் உண்மை வெளிப்படும் என்றும் இலங்கை அரசு அஞ்சுகின்றது என்பது நன்றாகப் புரிகின்றது.

எனவே, அலி சப்ரியின் பெறுமதியற்ற கருத்துத் தொடர்பில் நான் அதிகம் பேச விரும்பவில்லை. அவரின் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை நடந்தது உண்மை. அது தொடர்பான கனேடியப் பிரதமரின் அறிக்கையை வரவேற்கின்றோம். இனியாவது -- இப்போதாவது ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியுமா? என்று இலங்கை அரசிடம் கேட்கின்றோம். இலங்கை அரசுக்குத் துணிவிருந்தால் அதைச் செய்யட்டும்.என்றார்.

## தமிழர் நிலங்களை களவெடுத்தே

காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விடுதலைப் புலிகளுடன் வேறு சில அமைப்புக்கள் ஒன்றிணைந்து இருந்த காலப்பகுதியில் பௌத்த விகாரைகள் உடைக்கப்பட்டன என கூறியுள்ளார்.

அதை நேரடியாக விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள் எனக் கூற முடியாது எனவும் அதனை யார் செய்தார்கள் என புரிந்தே கூறுதல் வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் நினைந்திருந்தால் அவர்களது தனியான 14 வருட காலப்பகுதியில் வெடியரசன் கோட்டை போன்றவற்றை இல்லாது செய்திருக்கலாம் ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமன்றி புத்தர் இந்து முறைப்படி வாழ்ந்தவர் என்பதால் அதனை அனைவரும் சிங்கள பௌத்தம் என கூறுதல் தவறானது என்றும் தெரிவித்தார்.

பௌத்தம் வேறு எனவும் சிங்கள சாதி வேறு எனவும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் கல்வி துறையில் மாற்றங்களை ஏற்படுத்த முனையும் புதிய ஆளுநர்

கலந்துரையாடலின் போது பின்வருவனவற்றை உடனடியாக செயல்படுத்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

52% முதல் மிகக் குறைந்த பெறுபேறுகளை கொண்ட கல்வி வலயங்கள் தொடர்பான அறிக்கைகளை % வேலை நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளதுடன், ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்களை நியமிக்கவும் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவித்தார். மேலும் உள்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்த பாடசாலைகள் பற்றிய அறிக்கைகளை உடனடியாக பெற்றுத்தரும் அறிவுறுத்தியுள்ளார். பாடசாலை வளாகத்தைச் சுற்றி போதைப்பொருள் பாவனை தொடர்பில் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் எனவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார். பாடசாலை மாணவர்கள் இடைநிறலை நிறுத்த புதிய திட்டத்தை தொடங்குவதற்கும் உத்தேசித்துள்ளார்.

கல்வித் திட்டங்களுக்கு ஆதரவாக எம்பேஸ்ஸேயின் கூடுதல் நிதி உதவியைப் பெறவும் கர்ப்பிணி ஆசிரியைகள் முன்னுரிமை அடிப்படையில் அருகில் உள்ள பாடசாலைகளில் இணைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## கனடாவின் கருத்துக்கு ஜனாதிபதி மௌனம் காப்பது ஏன்..?

முப்படையினரும், பொலிஸாரும் இலங்கையில் தமிழினப்படுகொலையை மேற்கொண்டதாக தெரிவித்துள்ள கருத்தை கனேடியப் பிரதமர் மீளப் பெற வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏன் மௌனம் காக்கின்றார்? என காலிமுகத்திடல் மக்கள் அமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது.

கனேடிய பிரதமரின் கருத்துக்கு எதிர்ப்பினை வெளியிட்டு காலி முகத்திடல் மக்கள் அமைப்பு (22) கொழும்பிலுள்ள கனடா உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, கடிதமொன்றையும் கையளித்திருந்தது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட் காலி முகத்திடல் மக்கள் அமைப்பின் உறுப்பினர் பலங்கொட கஸ்வத்த தேரர்,

இலங்கையில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தமிழ் இனப் படுகொலை செய்துள்ளனர் என கனேடிய பிரதமர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கருத்துக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பதிலளிக்க வேண்டியதில்லை. மாறாக ஜனாதிபதியும், பிரதமரும் நேரடியாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவித்திருக்க வேண்டும்.

கனேடிய பிரதமரின் ஆதரமற்ற கருத்துக்களை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். எமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

இலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கனடா அறியாத பல தகவல்களை நாம் இந்தக் கடிதத்தில் உள்ளடக்கியுள்ளோம்.

தளதா மாளிகை மீதான தாக்குதல்கள், ஸ்ரீமகா போதி தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

அந்த சந்தர்ப்பத்தில் தமது குடும்பத்தினரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குடும்ப அங்கத்தவர்கள் வெ வ்வேறு பேரூந்துகளில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களின் காரணமாக எமக்கும் பதில் தாக்குதல்களை நடத்த வேண்டியேற்பட்டது.

இறுதியில் அனைத்து இன மக்களும் அழிவை எதிர்கொண்டனர். இவற்றை ஜனாதிபதியும் , பிரதமரும் கனடாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ஏன் அமைதி காக்கின்றார்?

சிங்கள பௌத்த மக்களை இனவாதிகளெனக் குறிப்பிட்டு, எமக்கு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை மறுக்கின்றனர்.

ஜனாதிபதியும், பிரதமரும் இது குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்காவிட்டால் நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று உரிய நடவடிக்கைகளை எடுப்போம். எனவே கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்துக்களை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்றார்.

## மட்டக்களப்பு பாடசாலை மாணவர்களுக்கு ...

நேற்று திங்கட்கிழமை (22) விநியோகித்துள்ளனர்.

இதில், பாடசாலை முடிந்தவுடன் மாணவர்கள் அநாவசியமாக வெளியில் நிற்காமல் வீடுகளுக்கு உடன் செல்லவும், இனந்தெரியாதோர் உண்பதற்கு ஏதாவது கொடுத்தால் வாங்க வேண்டாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனம் தெரியாதேர் வாகனங்களில் ஏற்றிச் சென்று வீடுகளுக்கு விடுகின்றோம் என்றால் வாகனங்களில் ஏற வேண்டாம் எனவும், மாணவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் இது தொடர்பாக பெற்றோருக்கு தெரியப்படுத்துமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமாக யாராவது நடமாடினால் பொலிஸ் அவசர தொலைபேசி அழைப்பிற்கு அல்லது 065 2224356, 065 2224422 என்ற இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு துண்டுபிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு துண்டுபிரசுரம் வழங்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் நடந்தது இனப்படுகொலை அல்ல!


கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது’ என்று அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடம் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘கனேடியப் பிரதமரின் அறிக்கை தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள கருத்தை முழு மனதுடன் வரவேற்கின்றோம். உண்மை நிலைமை அறியாது சர்வதேசத் தலைவர்கள் கண்டபடி அறிக்கைகளை வெளியிடக்கூடாது.

இலங்கையில் போர் நடந்தது உண்மை. அதில் விடுதலைப்புலிகளும், இராணுவத்தினரும் உயிரிழந்தது உண்மை. மக்களும் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்ததும் உண்மை. அதற்காக இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கனேடியப் பிரதமரின் கூற்றை அடியோடு மறுக்கின்றோம்.’ என்றார்.

# கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானுக்கும் யுன்னான் மாகாண பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல்



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானுக்கும் யுன்னான் மாகாண பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் இடம் பெற்றது.

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் (21) இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில், யுன்னான் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இருதரப்பு வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாண மக்களுக்கு மனிதாபிமான நிவாரணங்களையும் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள , பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஆகியோருடன் யுன்னான் ஆளுநர் வாங் யூபோ, சீனத் தூதுவர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் தலைமையிலான குழுவினரகள் பங்கேற்றனர்.

## கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்(நிதி) மரணம்



(ரக்ஸனா)

கிழக்கு மாகாண சபையின் நிதிக்குப் பொறுப்பாக கடமையாற்றி வந்த பிரதிப் பிரதம செயலாளர் சரவணமுத்து நேசராசா அவர்கள் சனிக்கிழமை(20.05.2023) அன்று மரணமடைந்துள்ளார். சிறிது காலம் சுகயீனமுற்ற நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அன்னாரனது பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு 32, கிறீன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் களுதாவளை மாயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு களுதாவளைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து நேசராசா அவர்கள் மட்டக்களப்பு கச்சேரி, தெகிவளை மிருகக் காட்சிசாலை, உள்ளிட்ட பல இடங்களில் பிரதம கணக்காளராக கடமையாற்றி இறுதியில் கிழக்கு மாகாண சபையின் நிதிக்குப் பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளர் கடமையாற்றி வந்தவராவார்.

அன்னார் களுதாவளைக் கிராமத்திற்கு கல்வி, கலை, கலாசாரம், சுகாதாரம், வீதிய அபிவிருத்தி, வாழ்வாதாரம், உள்ளிட்ட பல துறைகளிலும் ஏராளமான கடமைக்கு அப்பால் சமூகசேவைகளைச் செய்து வந்தவர் என்பதோடு, மாவட்டம், மாகாணம் தழுவிய ரீதியிலும் தன்னாலான பல சமூக சேவைகளைப் புரிந்து வந்தவராவார்.

இவரது இழப்பு தொடர்பில், மக்கள் பிரதிநிதிள், சமூகசேவையாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு இறுதி அஞ்சலியினை செலுத்தியினர்.

## கிழக்கு மாகாணத்தின் முதல் தமிழ் ஆளுநர் செந்தில் தொண்டமான் பதவியேற்பு



( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தின் முதல் தமிழ் ஆளுநர் செந்தில் தொண்டமான் கடந்த வெள்ளிக்கிழமை காலை திருகோணமலையில் பதவியேற்றார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் மற்றும் செயலாளர்கள் உயரதிகாரிகள் அரசியல் பிரமுகர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

புதிய ஆளுநருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் ஆளுநர் பணிமனையில் சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஆளுநர் பதிவேட்டில் ஒப்பமிட்டதும் பலரும் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அரசியல் பேதமின்றி நூற்றுக்கணக்கான பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.



### கிழக்கு கல்வி அபிவிருத்தியில்

# ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதாக அமையும்

### கல்முனை வலய அதிபர் சங்கம் நம்பிக்கை

(ஏயெஸ் மௌலானா)

கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தியில் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதாக இருக்கும் என கல்முனை கல்வி வலய அதிபர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, சங்கத்தின் சார்பில் தலைவர் இஸ்ட்.அஹமட், செயலாளர் ஏ.ஜி.எம்.றிசாத் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த காலங்களில் இந்திய வம்சாவளிய மக்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்து செயல்பட்ட சௌவமியமூர்த்தி தொண்டமானின் வழித்தோன்றலில் வந்த செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்துக்கு



புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டமையானது கிழக்கு மாகாண மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இதன் ஊடாக கிழக்கு மாகாணம் பாரிய அபிவிருத்திகளை சந்திக்க வாய்ப்புகள் உள்ளது. இவ்வாறான இளம் தலைவர்கள் எமது பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு மட்டுமல்லாமல் மக்களின் உரிமைகளையும் வென்றெடுப்பதிலும் பாரிய பங்களிப்பை செய்வார்கள்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதான அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக பாடசாலைக் கல்வியானது உயர்வான இடத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறன.

இந்நியமனத்தை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கல்முனை வலய அதிபர் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது- என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பள்ளங்கோட்டை புனித அந்தோனியார் ஆலயம் அபிஷேகம் செய்து திறந்து வைப்பு









( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் நானாட்டான் பங்கின் பள்ளங்கோட்டை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோணியார் ஆலயம் சனிக்கிழமை (20) மாலை 5 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் இவ்புதிய அலயம் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட குருமுதல்வர்இ பங்கு தந்தையர்கள் இஅருட் சகோதரர்கள் இஅருட்சகோதரிகள்இ பங்கு மக்கள்இ ஆலய சபை நிர்வாகத்தினரும் இவ் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்

இதனைத் தொடர்ந்து இன்றைய நாளில் மன்னார் மறைமாவட்ட ஆயரின் %5 வது பிறந்த தினத்தை முன்னிட்டு கேக் வெட்டி ஆயரின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

பள்ளங்கோட்டை புனித அந்தோணியார் ஆலயத்துக்கான அடிக்கல் கடந்த 2018ம் ஆண்டு நாட்டப்பட்ட நிலையிலேயே இவ்ஆலயம் திறக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு ஆளுனராக தமிழ் பேசும் மகன் நியமனத்தை எமது கட்சியும் நாங்களும் வரவேற்கிறோம்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஒருவர் ஆளுனராக நியமிக்கப்படுவர் என கிழக்கில் உள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் நினைத்தார்கள் ஆனால் தமிழ் பேசும் ஒருவரான செந்தில் தொண்டமானின் நியமனத்தை நாமும் எமது கட்சியும் வரவேற்கிறோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் (21) அவரது இல்லத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்



கிழக்கு மாகாணத்தில் கூடுதலான மலையக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் திருகோணமலை மட்டக்களப்பில் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள் இதனது கடந்த காலங்களில் மக்கள் காங்கிரஸ் அவர்களை கௌரவித்துள்ளது இந்த ஆளுனர் நியமனமும் வரவேற்கத்தக்கது .ஜனாதிபதியின் நல்ல பல திட்டங்களுக்காக செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டிருப்பது எமது சமூகத்தின் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கக் கூடிய வாறு இருக்க வேண்டும் என்றார்.


Japan Pacific
marketing pvt ltd cycle
உதிரிபாகங்கள்,
cycle உதிரிபாகங்கள்,
முழுமையான cycle தொகையாக
விற்பனைக்கு உண்டு .
ஓட்டமாவடி,
வாழைச்சேனை
தொடர்புகளுக்கு
0777197004

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை யூன் 12 முதல் 25 வரை திறந்திருக்கும்!
## உகந்தையில் அம்பாறை அரசஅதிபர் மாநாட்டில் தீர்மானம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல்விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரீகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் யூன் மாதம் 12ஆம் திகதி திறக்கப்படும். 13 தினங்களின் பின் மீண்டும் அது யூன் 25ஆம் திகதி மூடப்படும்.

இவ்வாறு அம்பாறைமாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையிலான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் மற்றும் கதிர்காமம் காட்டுப் பாதை தொடர்பிலான முன்னோடிக்கூட்டம் செவ்வாய்க்கிழமை பகல் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஒருமாத கால இடைவெளியில் நடைபெற இருக்கின்றது.

உகந்த மலை முருகன் ஆலய வருடாந்த திருவிழா யூலை மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட்2ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு .

காட்டுப்பாதை திறக்கும் அக்காலப்பகுதியில் காட்டுப்பாதையால் பயணிப்போர் பொலித்தீன்பாவனையை முற்றாகத் தடை செய்ய வேண்டும். அன்னதானம் வழங்குவோர் லன்ச் சீற்றையும் சிறிய தண்ணீர் போத்தலை யும் தவிர்க்க வேண்டும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பாதயாத்திரீகர்கள் அனைவருக்குமாக 31 தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்படவேண்டும்.

காட்டுப்பாதையால் செல்லும் யாத்திரீகர்களுக்கான பாதுகாப்பை பொலிஸ் வனஜீவராசிகள் திணைக்களம் இராணுவம் என்பன இணைந்துவழங்கும்.

உகந்தயையடுத்துள்ள குமண பறவைகள் சரணாலய முன்றலில் யாத்திரீகர்கள்கணக்கெடுப்பொன்றுக்கு உள்ளாக்கப்படுவார்கள். கடந்தாண்டு 25ஆயிரம் பாதயாத்திரீகர்கள் பயணித்துள்ளனர். இவ்வாண்டு சுமார் 45 ஆயிரம் அடியார்கள் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவமும் வனஜிவராசிகள் திணைக்களமும் இணைந்து இக்கணக்கெடுப்பை எவ்வித கெடுபிடியுமின்றி நடாத்துவர்.

ஆலயவளாகத்தில் மின்சார வசதி சுகாதார வசதி யாத்திரீகர்களுக்கு நிறைவாக ஏற்படுத்திக்கொடுக்கப்படும். மலசலகூடவசதியும் சுத்தமாக வழங்கப்படும்.போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டு கூட்டம் நிறைவுற்றது.

# மண்சரிவு காரணமாக பகுதியளவில் வீதி பாதிப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

வெளிமட ஊவா பரனகம வீதியில் தரகல பல்லேஹெல பகுதியில் நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட மண்சரிவினால் வீதியின் ஒரு புறம் முற்றாக மூடப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் மண்சரிவை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

பாரிய மண்மேடொன்று சரிந்து வீதியில் வீழ்ந்தமையினாலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மண்மேடு சரிந்த இடத்திற்கு அருகாமையில் குடியிருப்புடன் கூடிய கடைத்தொகுதி ஒன்றும் காணப்படுவதால் அக்கட்டிடத்திற்கும் ஆபத்து ஏற்படலாம் என அதன் உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த கட்டிடத்தை மண்சரிவிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பேசாலையில் துர்நாற்றம் வெளிவந்து கோண்டிருக்கும் பிரதான பஸ் தரிப்பிடம்



**( வாஸ் கூஞ்ஞ)**

துர்நாற்றத்துக்கு முகம் கொடுக்க முடியாது தவிக்கும் பிரயாணிகள் மட்டுமல்ல அச்சூழலில் வந்து செல்லும் மக்களும் துர்நாற்த்தை சுவாசித்து நோய்களுக்கு உள்ளாகும் நிலையும் தொடருவாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பேசாலை பகுதி மன்னார் மாவட்டத்தில் சனத்தொகை நிறைந்த ஒரு கிராமம் மாத்திரமல்ல பல பாகங்களிலிருந்தும் இப்பகுதிக்கு வெளியார் வர்த்தக ரீதியாகவும் பொது மக்கள் இப்பகுதிக்கு தங்கள் முக்கிய தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் வந்து செல்லும் ஒரு பகுதியாகவும் இப் பகுதி காணப்படுகின்றது.

இவ்வாறு இங்கு வந்து செல்வோரின் போக்குவரத்து வசதிக்காக இன்றல்ல நேற்றல்ல நீண்ட காலத்துக்கு முன்பே ஒரு முக்கியமான இடத்தில் பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டு பயனுள்ளதாக இருக்கின்றது.

ஆனால் தற்பொழுது இவ்பஸ் நிலையத்திலிருந்து பிரயாணிகள் தங்கள் போக்குவரத்து சேவையில் தொடர்வதில் பெரும் அசௌரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் பேசாலையின் முக்கிய பகுதியில் அதுவும் பிரதான தபாலகம் . மரக்கறி , மீன் சந்தை தேனீர் கடை போன்ற வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள இவ்விடத்திலேயே இவ் பஸ் தரிப்பிடம் அமைந்துள்ளது

இவ் பஸ் நிலையத்தில் வெயில் மழை யாவற்றுக்கும் பிரயாணிகள் தங்கிச் செல்லும் வசதியுள்ள ஒரு தங்குமிடமாக பேசாலை புனித ஸ்நாபக அருளப்பர் மன்றம் நீண்ட காலத்துக்கு முன் புனரமைத்திருக்கின்றபோதும் தற்பொழுது இவ் தங்குமடத்துக்குள்ளோ அல்லது அவ்வழியால் செல்வோரோ ஜீரணிக்க முடியாத நிலையில் இவ் தங்குமிடத்திலிருந்து துர்நாற்றம் வெளிவந்து கொண்டிருப்பதாக புகார்கள் எழுந்து வருகின்றன.

ஆகவே இது தொடர்பாக சமப்ந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே பலரின் வேண்டுகோளாக இருக்கின்றது.

# சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா



**(அ . அச்சுதன் )**

கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா 04-06-2023 ஞாயிற்றுக்கிழமை முழு நிலவை முன்னிறுத்தி வரும் கேட்டை நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய காலை 8.00 மணி 03 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலம் நாகம்மாள் ஆலயத்தினைச் சென்றடைந்து பக்தி பூர்வமான கிரியையோடு மடைப்பெட்டி வளர்ந்து ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் அவர்களினால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா ஆரம்பமாகும்.

வேளை நூல் கட்டுதல், பொங்கல் சாடி வைத்தல், பால்பழப்பூசை, சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சள் நீர்வார்க்கும் நிகழ்வும் நடைபெறும்.

நிறைவாக விஷேட தீபாராதனைகளுடன் பூசை இடம்பெற்று, ஸ்ரீமகாவிஷ்ணு ஆறுமுகவேல் சகிதம் அம்பாள் திருஉலாவந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பாள்.

அடியார்களின் நலன் கருதி பேருந்து வசதி மூதூரில் இருந்து நாகம்மாள் ஆலயம் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது மேலும் வழமை போல் ஆலயத்தில் இவ்வருடமும் அன்னதானம் வழங்கப்படும் என ஆலய பரிபாலான சபை அறிவித்துள்ளது.

# கல்முனையில் கிரிக்கெட் புதியசீருடை வெளியீடு





**( காரைதீவு சகா)**

கல்முனை கே பி எல்( KPL) கிண்ணத்திற்கான போட்டியில் கலந்து கொள்ளும் பிரபல ஈஸ்டர்ன் ரோயல்ஸ் அணியினருக்கான புதிய சீருடை வெளியீட்டு நிகழ்வு(21) கல்முனையில் நடைபெற்றது.

ஈஸ்ட்டர்ன் ரோயல்ஸ் அணியின் முகாமையாளரும் பிரபல தொழிலதிபருமான பாலசுப்பிரமணியம் ஜகந்நாத் தலைமையில் நடைபெற்ற சீருடை வெளியிட்டு விழாவில் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் , உவெஸ்லி கல்லூரி முன்னாள் அதிபர் வி. பிரபாகரன், பிரபல சமூக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஷ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

ஈஸ்டர்ன் ரோயல்ஸ் வீரர்களுக்கு சீருடைகள் உபயோகிக்கப்பட்டன.

ஈஸ்டர்ன் ரோயல் அணியின் அனுசரணையாளர்கள் அபிமானிகள் ஆதரவாளர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

# போது சகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனம் வழங்கி வைப்பு!





**(அபு அலா)**

மத்திய சுகாதர அமைச்சினால் கிழக்கு மாகாணத்திற்கு நியமனம் செய்யப்பட்ட 5 பொது சகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு (22) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம் பெற்றது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதன் வழங்கி வைத்தார்.

# கல்குடாவில் வட்டியில்லா உதவிக் கடன் திட்டம் அறிமுகம்!





**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கல்குடா தொகுதியில் வட்டியில்லா கடன் திட்டமொன்றை ஆரம்பித்தல் மற்றும் மஸ்ஜித் முகாமைத்துவத்தின் மூலம் பலமான சமூக கட்டமைப்பை தோற்றுவித்தல் எனும் தொனிப்பொருளில் விசேட செயலமர்வொன்று சனிக்கிழமை (20) காவத்தமுனையில் இடம்பெற்றது.

கல்குடா ஸகாத் நிதியம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவி எம்.எம்.எம்.தாஹிர் ஹாமி தலைமையில் இடம்பெற்றது.

இதில், கல்குடா தொகுதியிலுள்ள துறைசார்ந்த நபர்களை இணைத்துக் கொண்டு கல்குடா தொகுதியில் வட்டியில்லா கடன் உதவியை வழங்குவது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், கல்குடா தொகுதி பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினர்கள், தொழிலதிபர்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், வட்டியில்லா கடன் உதவி திட்டம் தொடர்பாகவும், மஸ்ஜித் நிர்வாக கட்டமைப்பு தொடர்பாகாவும் வளவாளர்காளாக உடுநுவர சமூக வைத்திய அதிகாரி பாயிக், வெலம்பொட வட்டியில்லா அழகிய கடன் நிறுவன முகாமையாளர் அர்ஷாத் ஏ டீன் ஆகியோர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

# போன் போதையால் வடக்கு கிழக்கில் வாசிப்புவீதம் குறைந்து வருகிறது! நூல் வெளியீட்டு விழாவில் கலையரசன் எம்பி கவலை!

( வி.ரி.சகாதேவராஜா)



போதைப்பொருட்களைவிட மிகவும் மோசமானது செல்போன் என்ற போதையாகும். இந்த செல்போன் கலாச்சாரத்தால் வடக்கு கிழக்கில் வாசிப்பு கலா சாரம் பொதுவாக குறைந்து வருகிறது.

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கவலை தெரிவித்தார் .

காரைதீவு கோட்டக்கல்விப்பணிப்பாளர் பைந்தமிழ்க்குமரன் ஜே.டேவிட் எழுதிய ''கறையான் தின்றகனவுகள்'' என்ற சிறுகதை

நூல் வெளியீட்டு விழாவானது அதிபர் எஸ்.மணிமாறன் தலைமையில் காரைதீவு இ.கி.மி பெண்கள் வித்தியாலயத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழரசு கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் கௌரவ அதிதிகளாக கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன்,காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதியசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அங்கு நூல் வெளியீட்டுரையை எழுத்தாளரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

முதல் பிரதியை பிரதம பொறியியலாளர் பி.இராஜமோகன் பெற்றுக் கொண்டார்.

அங்கு பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையில் தமிழ் மக்கள் பாரிய யுத்தத்தை எதிர்கொண்டு சின்னாபின்னமாக போயிருக்கின்றார்கள். அவர்கள் பீனிக்ஸ் பறவை போல் மீண்டெழுவதற்கு இலக்கியம் வழி சமைக்க வேண்டும்.

இன்று பாடசாலை மாணவர்கள் இந்த செல்போன் கலாச்சாரத்தால் மிகவும் மோசமாக படிப்பை இழந்து வருகிறார்கள். வாசிப்பை தவிர்க்கிறார்கள். சமுதாயத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சகலரும் எப்பொழுதும் ஃபோனை நோண்டிக் கொண்டிருக்கின்ற ஒரு அவலத்தை பார்க்கின்றோம். சமூகத்தின் நல்லது நடக்கின்ற பொழுது அதை தட்டிக் கொடுப்பதை விடுத்து அதில் குறை காண்கின்ற ஒரு சமூகமாக நாங்கள் மாறிக் கொண்டிருக்கிறோம். எமது சமூகம் வளர வேண்டுமாக இருந்தால் புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து அதனூடாக நாங்கள் வெற்றி அடைய வேண்டும்.

திரு ஜெ டேவிட் அவர்கள் இறுக்கமாக கல்வி பணிக்குள் இலக்கிய பணியையும் ஆற்றிவருவது பாராட்டுக்குரியது என்றார்.

நூலாசிரியர் டேவிட் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

நூல் நயவுரைகளை முன்னாள் தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர் கண. வரதராஜன் திறனாய்வாளர்களான ஆத்ம ரூத் சந்திரிகா ஜெஸ்மி எம் முஸா ஆகியோர் நிகழ்த்தினர்.

விசேட அதிதிகளாக கல்முனை வலய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன் பிரதம பொறியியலாளர் பி.ராஜமோகன் , நிந்தவூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.ஷரிபுதீன் , காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில் கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, நீர்பாசன திணைக்களப் பொறியியலாளர் வி. விஜயசாந்தன் , சம்மாந்துறை கல்வி வலய உதவி கல்வி பணிப்பாளர் வீ.ரீ.சகாதேவராஜா , கல்முனை கல்வி வலயத்தின் உதவி கல்வி பணிப்பாளர் ஏ.சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் நிதியமைச்சின் நடமாடும் சேவைகள்




(அஷ்ரப் ஏ சமத்)

நீதி அமைச்சின் நடமாடும் சேவையும் மக்கள் பணி மே 26 ஆம் திகதி திருகோணமலையில், மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் மே2%ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் நடைபெற உள்ளது. என நிதியமைச்சு நடைபெற்ற ஊடக மாநாட்டில் அமைச்சரின் ஊடக ஆலோசகர் கலாநிதி ஹர்ஷ அபேரத்தின தெரிவித்தார்.

இவ் நடமாடும் சேவையில் நீதி அமைச்சு மற்றும் பதிவாளர் திணைக்களம், அடையாள அட்டை, கடவுச்சீட்டு வழங்கும் திணைக்களம், புனர்வாழ்வு அதிகார சபை, கிழக்கு மாகாண சபைகளின் கீழ் உள்ள அரச அலுவலகங்கள், சிறைச்சாலைகள் திணைக்களம், நீதி அமைச்சின் கீழ் உள்ள மொழிகள் திணைக்களம், தேசிய இன ஐக்கிய அலுவலகம் ,, பொலிஸ், சட்டத் திணைக்களம், காணிப் பதிவு,, கிராமங்களில் உள்ள சமாதானப் பேரவை உறுப்பிணர்கள் , போன்ற சகல அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் இவ் நடமாடும் சேவைகள் நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலும் பிரதேச அரச பிரநிதிகளின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றன.

இன்று 18. நீதியமைச்சு அமைச்சரின் ஊடக ஆலோசகர் ஹர்சா அபேரத்ன, உதவிச் செயலாளர் சந்தமாலி பிரதாப் மொழிகள் தேசிய ஒற்றுமைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் சானிக்கா விஜயசூரிய ஆகியோர்கள் கலந்து கொண்டு மேற்படி நடமாடும் சேவைகள் பற்றிய கருத்துக்களை தெரிவித்தனர்.

இச் சேவைகளுக்கு பிரதேச சபை காரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலாளர்கள் ,பிரதேச செயலாளர்கள், கிராம அதிகாரிகள் பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரிகளது சேவைகளும பெற்றுக் கொடுக்கப் படும். இந் நடமாடும் சேவையில் தத்தமது பிரச்சினைகள் மற்றும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இடம் பெயர்ந்து மீள இலங்கை வந்துள்ளவர்கள் அவர்களது பிறப்பு பதிவுகள், அடையாள அட்டைகள், பெற்றுக் கொள்ளாதவர்கள் இச் சேவைகள் ஊடாக உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை காணாமல் போனவர்கள் வட கிழக்கில் 2000 பேருக்கும் அதிகமான குடும்பங்கள் அமைச்சருக்கு முறையிட்டுள்ளனர் அவர்கள் இறப்பு சான்றிதழ்களுக்கான முறையிட்டுள்ளனர். என்றும் ஊடக ஆலோசகர் கருத்து தெரிவித்தார் இந்த அமைச்சின் கீழ் சகல பிரதேச செயலளார் பிரிவிலும் 2444 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனா். அவர்கள் ஊடாகவும் பிரதேச மக்கள் தமது பிரச்சினைகளை முன் வைக்க முடியும். எனவும் தெரிவிக்கப்பட்டது.

# வட,கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு

(க.ருத்திரன்)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வழங்க வேண்டும் என்பது பற்றிய மக்கள் பிரகடனம் குறித்தான தெளிவுபடுத்தல் செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தன்னாமுனை மியானி தொழில் நுட்ப நிலையத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்த செயலமர்வு நடைபெற்றது. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் கண்டுமனி லவகுகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்கலைக் கழக் மாணவர்கள்,சமூக ஆர்வலர்கள்,இளைஞர் யுவதிகள்,அகம் மனிதாபிமான அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான தீர்வினை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு நாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் நூலாக்கப்பட்டு அது தொடர்பிலும் விளிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.இணைந்த வட கிழக்கின் அவசியம் அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் உட்பட வடகிழக்கில் வாழ்வோர்அடையப் போகும் நன்மைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.நிகழ்வில் வளவாளராக அமைப்பின் உறுப்பினர் அ.மதன் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்.

மேற்படி அமைப்பின் இணைப்பாளர் கண்டுமனி லவகுகராசா தமது உரையின் போது...

கடந்த காலங்களில் இனப் பிரச்சினைக்கான தீர்வாக ஆட்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வு திட்டங்களை கருத்தில் கொண்டு 13 ஆவது திருத்தத்தின் சராம்சத்தை பரிசீலித்து குறிப்பாக 2002 ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் மத்தியத்துவத்துடன் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிநடாத்தலில் திரு.ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினால் ஒஸ்லோ உடன் படிக்கையின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ''ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு'' என்பதனை சீர் தூக்கிப் பார்த்தும் இந்த பிரகடனம் மக்களின் குரலாக வெளிப்படுகிறது என தெரிவித்தார்.

பிரகடனத்தின் ஊடாக மக்களால் முன்வைத்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு பற்றிய தெளிவை இளைஞர்கள்,சமூக ஆர்வலர்களுக்கு ஏற்படுத்துவதோடு அவர்களது கருத்துக்களை உள்வாங்கப்படுவதும் இன்றைய கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும் என ஏற்பாட்டாளர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

# கல்முனையில் பிரபல கே.பி.எல். கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பம்






(வி.ரி. சகாதேவராஜா)

நற்பிட்டிமுனை சூப்பர் ஸ்டார் விளையாட்டு கழகம் வருடாந்த நடத்திவரும் கேபிஎல் எனும் மாபெரும் கிரிக்கெட் சுற்று போட்டி சனிக்கிழமை (20) கல்முனை உவெஸ்லி மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கழகத் தலைவர் ரி.கமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரிஜே. அதிசயராஜ் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

கல்முனையின் பத்து பிரபலமானமான அணிகள் கலந்து கொள்கின்றன . எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் தேதி இறுதிப்போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அணிக்கு 12பேர் கொண்ட 10 ஓவர் கடின பந்து கிரிக்கெட் சுற்று போட்டி லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றது .

முதலாவது கன்னிப் போட்டியில் பிரபல கழகமான ஜெகநாத்தின் ஈஸ்டர்ன் ரோயல் அணியும், எஸ் பி ஜி அணியினரும் மோதிக் கொண்டன.

# சீனாவில் தமிழ் மோழிக்கு சிறப்பு அந்தஸ்து! தமிழ் பாடநூல் வெளியீடு:தமிழர்கள் பெருமிதம்!



( வி.ரி.சகாதேவராஜா)

சீனாவில் தமிழ் மொழிக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அங்குள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. அதற்கான தமிழ் பாடநூல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது

இன்று உலக நாடுகள் பலவற்றிலும் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உலகளாவிய ரீதியில் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்கான துறைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் சீனாவின் முதலாவது சீன மொழி மூல அடிப்படை தமிழ் பாட நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலை சீன பேராசிரியர் நிறைமதி எழுதி உள்ளார்.

இந்த செயற்பாடானது தமிழையும் தமிழ் மக்களையும் பெருமைபடுத்தும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

சீனாவின் யுனான்மிஞ்சு பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான நிறைமதி சீனமொழி மூலமான அடிப்படை தமிழ்பாட நூலை எழுதி உள்ளார்.

இந்த செயற்பாட்டின் மூலம் சீனாவில் தமிழ்மொழியை மாணவர்கள் இலகுவாக கற்றுக்கொள்ள முடியும் .

சீனாவில் மாணவர்கள் தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்று வருகின்றனர்..

இதற்கு முன்னர் பேராசிரியர் நிறைமதி எழுதிய 'மலைகளை தாண்டி மதுரை பயணத்தில்', 'சீன பெண்ணின் பண்பாட்டு தேடல்' என்ற நூலும் இந்தியாவில்பெரும் வரப்பரப்பை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழி மீது கொண்ட பற்று காரணமாக தனது இயற் பெயரையும் தமிழ் பெயராக மாற்றி கொண்டமை அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளது.

உலகின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்யும் பேராசிரியர் நிறைமதி தமிழ் மொழி மீதான பற்று காரணமாக அந்த பிரதேசங்களின் பெருமைகளை தமிழ் மொழியில் நூல்களாக வெளியிடுவதும் காணொளியாக வெளியிடுவதும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(வாஸ் கூஞ்ஞ)

சட்டவிரோதமாக மாணிக்ககற்கள் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் மஸ்கெலியா பொலிசாரின் சுற்றி வளைப்பின்போது கைது செய்;யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (21.05.2023) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது;

மஸ்கெலியா பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மஸ்கெலியா பொலிசார் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்சீக் தோட்ட பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த இரண்டு நபர்களை கைது செய்துள்ளனர்.

இவர்கள் அன்றையத் தினமே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு எதிர்வரும் 24 ம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகும் படி சந்தேக நபர்களுக்கு பணித்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

சொல்லத் துடிக்குது மனசு : 14

# மரபுசார் திருமண நிகழ்வும் கோண்டாட்டமும்

*மணப் பொருத்தம் மனப் பொருத்தம் பார்த்து
மணமக்களைச் சேர்த்து வைக்கும் திருநாளாம்
திருமணத்தில் ஊர்கூடிச் சேர்ந்திடுவர் சுற்றத்தார்
விருந்துண்டு மனதார வாழ்த்திச் சென்றிடுவர்*

திருமணம் என்பது புதிய உறவு ஒன்றுக்கான ஒப்பந்தமாகும். இது மரபு, சம்பிரதாயம், குலம், கோத்திரம், சட்ட, திட்டங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுவது. நாட்டின் திருமண ஒப்பந்தச் சட்டத்திற்குப் புறம்பாகத் தேச வழமைச் சட்டம், கண்டியத் திருமணச் நட்டம், இஸ்லாமியத் திருமணச் சட்டம் ஆகியவற்றுக்கு அமைவாகவே திருமண ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படுகின்றன. பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் அதற்கு முன்னரும் கிழக்கு மாகாணத்தில் இந்துக்களிடத்தில் வழக்கில் இருந்த மிகப் பெறுமதியான முக்குகச் சட்டம் பால்கோல் முதலியின் முயற்சியினால் திட்டமிட்டு நீக்கப்பட்டது. அதிலும் மிகப் பிரபலமான திருமணச் சட்டம் அடங்கி இருந்தது.

திருமண ஒப்பந்தம் நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்குப் பிரதேசம், இனம். மதம், குலம், கோத்திரம், சம்பிரதாயம், பழக்க வழக்கம் என்பவற்றுக்கு அமைவாக அவரவர் வசதி, வாய்ப்புக்களுக்கு ஏற்ப மிக ஆடம்பரமாகவும் மிக எளிமையாகவும் நடந்தேறுகின்றன. சில சில நாடுகளிலும் பிரதேசங்களிலும் சில திருமணங்கள் விசித்திரமாகவும் அருவருப்பானதாகவும் நடத்தப்படுகின்றன. இருந்தும் மட்டக்களப்பில் இந்துக்கள் மத்தியில் நடைபெறும் திருமணச் சடங்கு முறை உலக திருமண நடைமுறைகளில் இருந்து சிறப்பும், பெருமையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. திருமணத்தினை கல்யாணம் எனவும் அழைப்பர். மட்டக்களப்பில் இந்துக்களின் திருமணங்கள் பெரும்பாலும் நடைமுறையிலுள்ள திருமணச் சட்டத்துக்கு அமைவாகவே நடந்தேறுகின்றன. 19%0 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற திருமணங்களில் 40 வீதமானவை சட்டப்படி திருமணப் பதிவு [ஹசாது] வைக்கப்படாமலே நடத்தப்பட்டிருந்தன. இப்போதும் சில பின்தங்கிய கிராமப் புறங்களில் சில திருமணங்கள் அவ்வாறு நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இக்கட்டுரை மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்துக்கள் மத்தியில் 19%5 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில நடந்த திருமண நிகழ்வுகள் பற்றியே கூற விளைகின்றது.

இரு தரப்பினரும் பேசித் தீர்மானித்த திருமணங்கள், காதல் திருமணங்கள், கட்டாயத் திருமணங்கள், சம்பந்தப்பட்ட இருவரும் வீட்டை விட்டுச் சென்று திருமணம் செய்து கொள்ளல் ஆகிய திருமண நடைமுறைகள் மட்டக்களப்பில் இந்துக்களிடத்தில் காணப்பட்டாலும் 90 வீதத்துக்கு மேற்பட்ட திருமணங்கள் இரு தரப்பினரும் பேசித் தீர்மானித்து நடைபெறும் திருமணங்களாகவே அமைகின்றன. பேசித் தீர்மானிக்கும் திருமணங்களில் பல நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இந்நடைமுறை குறைந்தது ஆறு மாதங்களாவது தொடரும். முதலில் நண்பர்கள், உறவினர்கள் சிலரால் திருமண உறவு தொடர்பான கதை ஒன்று உலாவரும். அதன்பின்னர் பெரியோர் உறவினர்களைக் கொண்டு பேச வைப்பார்கள். பேசிச் சாதகமான சூழல் உருவாகியதும் தந்தையும் தாய் மாமனுமாக மாப்பிள்ளை வீட்டாருடன் பேசச் செல்வார்கள். இத்தருணத்தில் இருவரின் ஜாதகக் குறிப்பக்களும் பெண்ணின் ருது ஜாதகக் குறிப்பும் கொண்டு பொருத்தம் பார்த்து முடிவு செய்யப்படும். இதில் கண்ட ரச்சு, யோனி, இராசிப் பொருத்தம் உட்பட எட்டுக்கு மேற்பட்ட பொருத்தங்கள் பொருந்துகிறதா எனக் கட்டாயமாகப் பார்ப்பார்கள். அப்போதுள்ளவர்களில் பெரும்பாலானோர் சுயமாகவே பஞ்சாங்கம் பார்க்கக்கூடிய திறமை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். பெரும்பாலான வீடுகளில் பஞ்சாங்கம் வைத்திருப்பார்கள். பொருத்தம் பார்த்து முடிவானதும் பெண்ணின் தாயும், நெருக்கமான சில உறவுப் பெண்களும் நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று வருவார்கள். அதன் பின்னர் பெண் வீட்டார் ஊரிலுள்ள முக்கியத்தர்கள், உறவினர்களோடு சம்பிரதாயபூர்வமாக மாப்பிள்ளை வீட்டுக்குப் கொழுக்கட்டைப் பெட்டி கொண்டு செல்வார்கள். மாப்பிள்ளை வீட்டார் மறுபெட்டி[பதில் பெட்டி] கொண்டு வந்து பெண்ணையும் பார்த்துச் செல்வார்கள். அதிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் பெண் வீட்டார் ஊர் கூட்டி மாப்பிள்ளை கேட்டு பெட்டி [கொழுக்கட்டை, பலகார வகைகள், வாழைப்பழம்] கொண்டு செல்வார்கள். இதனைப் பலகாரப் பெட்டி கொண்டு செல்லல் எனவும் அமைப்பர். இவை பனை ஓலையினால் பின்னப்பட்ட பெட்டிகளாக இருக்கும். அப்பெட்டிகளைப் புதுத் துணியினால் சுற்றிக் கட்டி இருப்பார்கள். இத்தருணத்தில் திருமணப் பேச்சு வார்த்தைகள் யாவும் உறுதியாக்கப்பட்டு மோதிரம் மாற்றுதல், திருமணப் பதிவு செய்தல், சீதனமாக உறுதி எழுதுதல், திருமணச் சடங்கு தொடர்பான திகதிகள் இரு வீட்டாரின் சம்மதத்துடன் பஞ்சாங்கம் பார்த்துத் தீர்மானிக்கப்படும்.





திகதிகள் உறுதியானதும் அவ்வத் திகதிகளில் ஒவ்வொரு நிகழ்வுகளும் நடந்தேறும். பெண், மாப்பிள்ளை இருவரினதும் விரல் சுற்றளவெடுத்துச் செய்த மோதிரத்தை இருவீட்டார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் பெண்ணும் மாப்பிள்ளையும் மாற்றிக் கொள்வார்கள். சில வேளைகளில் அன்றைய தினமே திருமணப் பதிவு வைத்தல் [ஹசாது வைத்தல்], சீதன உறுதி எழுதுதல் ஆகியனவும் நடைபெறும். அல்லது தனித்தனியே குறித்த தினங்களில் அவ்வந் நிகழ்வுகள் நடைபெறும். இன்னும் சில திருமணச் சடங்குகளில் அன்றைய தினமே மேற்குறித்த அனைத்தினையும் [மோதிரம் மாற்றுதல், திருமணப் பதிவு செய்தல், சீதன உறுதி எழுதுதல்] நிறைவேற்றிக் கொள்வார்கள். இதனால் செலவும் மீதப்படுத்தப்படும்.

திருமணத்துக்காகத் தீர்மானிக்கப்பட்ட தினத்துக்கு இரு மாதங்களுக்கு முன்பிருந்தே திருமண ஏற்பாடுகள் இரு வீட்டிலும் ஆரம்பித்துவிடும். அன்றைய திருமணங்களில் குடும்ப உறவுகள், உறவினர்கள், சுற்றத்தார், ஊர்ப் பெரியவர்களுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்படும். அங்கு வருபவர்கள் எல்லோரும் பெண்ணும் மாப்பிள்ளைக்கும் தெரிந்த உறவுகளாகவே இருப்பார்கள். வீடு, வளவு, வாசல் சுத்தம் செய்தல், கழுவுதல் மெழுகுதல், ஓட்டறை அடித்தல் ஆகியன சில தினங்களுக்கு முன்னர் முடிவடைந்திருக்கும். தாலிக்குப் பொன் உருக்குதல், தாலிக்கொடி செய்தல், பட்டுப் புடவை, கூறைச் சேலை, மாப்பிள்ளைக்கான பட்டு வேட்டி, சால்வை, பீதாம்பரம், சேர்ட்டு, இரு வீட்டாருக்குமான உடுப்புகள், உறவினர் சிலருக்கான உடுப்புகள் ஆகியன எடுக்கப்படும். பெற்றோல்மாக்ஸ், ஒலிபெருக்கி, மாப்பிள்ளை அழைப்புக்கான ஏற்பாடுகள், சோடனை, சமையல் ஒழுங்குகள், பலகாரம், முறுக்கு, சோயி சுடல் ஆகிய ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும். கொண்டாட்டம் காண உறவினர்களும் ஊர் மக்களும் திரண்டு வந்து ஒற்றுமையோடு கருமங்களில் ஈடுபடுவார்கள்.

அன்று பெரும்பாலான திருமணங்கள் இரவு வேளையிலேயே நடந்தன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் 90 வீதத்திற்கு மேற்பட்ட திருமணங்கள் வீடுகளிலேயே நடந்தேறின. கோயில்களிலோ, வீடுகளில் ஐயரைக் கொண்டோ ஆரிய, ஆகம, சமஸ்கிருத முறைப்படி நடத்தப்படவில்லை. இன்று அது ஒரு நாகரிகமாக மாறிவிட்டது. அன்று குடும்பங்கள் சந்தோசமாக இருந்தது போல் ஆரிய, ஆகம, சமஸ்கிருத முறைப்படி நடத்தப்பட்ட பெரும்பாலான திருமணங்கள் சந்தோசமாக இல்லை. இது பற்றி இரண்டாவது, மூன்றாவது கட்டுரைகளில் சுட்டிக் காட்டி இருக்கிறேன். இன்று எல்லாமே பணத்தை மையப்படுத்தியே தீர்மானிக்கப்படுகின்றன. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்து அமைதியற்ற சூழல் நிலவியமையால் பஞ்சாங்கத்தில் நாள்கள் எல்லாம் பகல் வேளைக்கு மாற்றப்பட்டன. எல்லோரினதும் வசதி கருதி அந்நடைமுறை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

சுபவேளை என்பது புவிச் சுழர்ச்சி, கிரக மாற்றம், அவற்றின் பார்வை, அது நிற்கும் இடம், இராசிகளோடு அது சேர்திருக்கும் காலம், வக்கிரம், தசாபுத்தி இவ்வாறு பல விடயங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. அமாவாசை, அட்டமி, இராகு காலம் தவிர்ந்த எவ்வேளையிலும் சுபநேரம் அமையலாம். இக்கணிப்பீட்டிலுள்ள குறைபாடு காரணமாகவே வாக்கிய பஞ்சாங்கத்துக்கும், திருக்கணித பஞ்சாங்கத்துக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகிறது.

சிறிய ஒரு மணவறை, வீட்டு முற்றத்தில் சோடனை, பிரதான கடப்படியில் குலையுடன் கூடிய வாழை மரம், குருத்தோலை, மாவிலை தோரணம் ஆகியன போடப்பட்டிருக்கும். வாசலில் பந்தல் போட்டுப் பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும். சில கதிரைகளையும் அங்காங்கே காணலாம். வருமான வசதி கூடிய திருமண வீடுகளில் ஒலிபெருக்கியில் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பாடலும் முடிந்ததும் கிராமபோன் [சூத்திரப் பெட்டி] பெட்டியில் ஊசி மாற்றி, வைனிங் கொடுத்து, ரெக்கோட்டை மறுபுறம் மாற்றிப் போட்டு சூத்திரப் பெட்டியை இயங்க வைப்பார். இத்தனையும் செய்வதற்கு ஐந்து நிமிட இடைவெளி தேவைப்படும். நூறு பாட்டினை ஒலிக்க வைப்பதற்கு ஐம்பது ரெக்கோட்டும், நூறு ஊசியும் நூறு தடவை வைனிங்கும் செய்ய வேண்டும். எந்நேரமும் ஒருவர் அருகில் இருப்பார். அப்போதெல்லாம் கிராமங்களில் மின்சார வசதி இல்லாததனால் ஈயமின் கலத்திலே [வாகன பற்றறி] ஒலிபெருக்கி இயங்கும். ஊசி முடிந்தால் ஒலிபெருக்கி இயங்குவது நின்றுவிடும்.



திருமண நாள் நிகழ்வுகளில் மாப்பிள்ளை அழைப்பு பிரதானமானதாக இருக்கும். தூர இடமெனில் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் மாப்பிள்ளையும் மாப்பிள்ளைத் தோழனும் தந்தையும் தாயும் அமர்ந்திருக்க ஏனையோர் நடந்து ஊர்வலமாக வருவார்கள். சில இடங்களில் மேள. நாதஸ்வர வாத்தியக்காரர்களும் அவர்களுடன் சேர்ந்து வருவர். ஓரே ஊரில் இருந்து மாப்பிள்ளையை அழைத்து வருவதென்றால் எல்லோரும் ஊர்வலமாக நடந்தே வருவர். ஊர்வலம் பெண் வீட்டுக் கடப்படிக்கு வந்ததும் கூறை, தாலிப் பெட்டி பறித்தலும், பெட்டிகள் கைமாறலும் இடம் பெறும். உறவினர்கள் சுற்றத்தார் எல்லோரும் பந்தலுக்குள் போடப்பட்டிருக்கும் பாயில் அமர்ந்திருபபார்கள். வாசலில் சபையோர் முன்னிலையில் வெள்ளைத் துணி விரித்து வைக்கப்பட்டிருக்கும் பலகையின் மேல் மணமக்களைச் சேர்ந்து நிற்க வைப்பார்கள். முகூர்த்த வேளையில் பெண்ணின் தந்தை மணமகளை மாப்பிள்ளைக்குக் கைப்பிடித்துக் கொடுப்பார். சபையோரின் ஆசீர்வாதத்துக்காகக் கொண்டு செல்லப்பட்ட தாலிக் கொடி வந்ததும் மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் கட்டுவார். அதன்பின்னர் நெருங்கிய உறவுப் பெண்கள் இருவர் வந்து ஆலாத்தி காட்டிக் கண்ணூறு கழிப்பார்கள். மணமகளின் தம்பி அல்லது தங்கை மணமக்களின் காலைக் கழுவுவர். அதன் பின்னர் சபையோரின் முன்னிலையில் வீட்டின் பிரதான வாசல் ஊடாக வீட்டுக்குள் அழைத்துச் செல்லப்படுவார்கள். சுவாமி அறைக்குச் சென்று வணங்கியதும் சருவக்காலின் மேல் வைத்த வட்டியில் [கலத்தில்] அறுசுவை கலந்த மரக்கறி உணவினை மணமகள் மணமகனுக்குப் பரிமாறுவார். இருவரும் மும்மூன்று கவளம் பிசைந்த சோறினை மாறி, மாறி ஊட்டிய பின்னர் தனித்தனியே உணவு உண்பார்கள். இதனைக் 'கலத்தில் போடுதல்' எனவும் அழைப்பர். அதன்பின்னர் பாயின்மேல் விரிக்கப்பட்ட படுக்கை விரிப்பில் அமர்ந்திருந்து இருவரும் தாம்பூலம் மாற்றிக் கொடுத்து உண்பார்கள். இந்த சம்பிரதாயங்கள் யாவும் நிறைவுற்றதும் ஆசீர்வாதம் பெறுவதற்காக மணவறைக்கு வருவார்கள்.

இதற்கிடையில் அழைக்கப்பட்டவர்களுக்கு பலகாரம், முறுக்குப் போன்ற இனிப்புப் பண்டங்களும் பால் தேநீரும் வழங்கப்படும். அதன் பின்னர் நமது கலாசார முறைப்படி சமைத்த உணவு வாழை இலையில் பரிமாறப்படும். அத்தோடு தயிர், சீனி, வாழைப் பழமும் வழங்குவார்கள். உணவு சாப்பிட்டு முடிந்ததும் வெற்றிலை, பாக்கு[தாம்பூல] வட்டா வழங்கப்படும். தாம்பூலம் மென்று முடிந்ததும் மணமக்களை வாழ்த்தி ஆசீர்வாதம் செய்யத் தயாராகுவார்கள்.

இன்றைய மணவறைகள் ஆடம்பரத்துக்காகவும், வீடியோ, புகைப்படம் எடுத்தலுக்காகவும் கோயிலிலும் திருமண மண்டபத்திலும் அல்லது வீட்டிலும் அமைக்கப்படும். முன்னைய மணவறை சாதாரண சோடனையுடன் அமைக்கப்படடிருக்கும். வீடியோ எடுப்பதில்லை. ஞாபகத்துக்காக ஓரிரு நிகழ்வுகளை கறுப்பு, வெள்ளைப் புகைப்படமாக எடுத்து வைப்பார்கள். மணவறையில் மணமக்கள் வந்து அமர்ந்தவுடன் இருவரின் பெற்றோரும் வாழ்த்தும் ஆசீர்வாதமும் வழங்குவார்கள். அதன் பின்னர் தாய் வழி, தந்தை வழி உறவினர்களும் சுற்றத்தாரும் கொண்டு வந்ததைக் கொடுத்து, மனமகிழ்ந்து வாழ்த்தும் ஆசீர்வாதமும் வழங்குவார்கள். இங்கு எது கொடுத்தார், என்ன கொடுத்தார், எவ்வளவு கொடுத்தார் என்பதெல்லாம் முக்கியமில்லை. அவர்களின் வாழ்த்தும் ஆசீர்வாதமுமே முக்கியமானதாகக் கொள்ளப்படும். இப்போதெல்லாம் பல திருமண நிகழ்வுகள் ஆடம்பரத்துக்காகவும், வர்த்தக நோக்கிலும் மேற்கொள்ளப்படுவதனால் தூய்மையான வாழ்த்தும் ஆசீர்வாதமும் கிடைப்பதில்லை. திருமணத்துக்கு மணமகன், மணமகளுக்குத் தெரியாத பலர் அழைக்கப்பட்டிருப்பார்கள். அதனால் பெரும்பாலும் வாழ்த்து, ஆசீர்வாதம் வழங்கலும் பெற்றுக் கொள்ளலும் தூய்மையானதாக இருப்பதில்லை. அத்தோடு பெற்றுக் கொண்டதைத் தரம் பிரித்துக் கணக்கெடுப்பதிலும் விசேட கவனம் செலுத்துவார்கள்.

மரவு வழித் திருமணத்தில் மணமக்களை வாழ்த்தி, ஆசீர்வதித்து முடிந்ததும் வருகை தந்த உறவினர்கள், சுற்றத்தார் எல்லோருக்கும் பலகாரம், முறுக்கு, சோயி, வாழைப் பழம் கொண்ட பொதி ஒன்று கையில் கொடுத்துச் சந்தோசமாக இரு வீட்டாரும் வழி அனுப்பி வைப்பார்கள். அவர்களும் மன மகிழ்வோடு வீடு போய்ச் சேர்வார்கள்.

அன்றைய தினம் மணமக்களுக்கான வாழ்த்தும் ஆசீர்வாதமும் முடிந்தவுடன் நேரமிருந்தால் மாப்பிள்ளை வீட்டுக்குக் கால்மாறிச் [மறுவீடு] செல்வார்கள். இல்லையெனில் நல்ல நாள் பார்த்துப் பிறிதொரு தினத்தில் கால் மாறிச் செல்வார்கள். அதுவரை இரு தரப்பார் வீடுகளிலும் கொண்டாட்டங்களும் தொடர்ச்சியான விருந்துபசாரங்களும் நடந்து கொண்டிருக்கும்.

மட்டக்களப்பு இந்துக்களின் மரபுசார் திருமண சம்பிரதாயங்கள் தொடர்பாக முழுமையான ஆய்வு செய்த சமூக, பண்பாட்டியல் துறைசார்ந்த அமெரிக்கப் பேராசிரியர் டெனிஸ் மைக்கல் பிறே சபை முன்னால் மணமக்கள் வீட்டினுள் புகுதலும் கலத்தில் போடுதலும் மட்டக்களப்புக்கே உரிய திருமண முறையின் சிறப்பம்சம் எனலாம் எனக் குறிப்பிடுவதில் இருந்து நமது மரபுசார் திருமணச் சடங்குகளின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப் படுகின்றது.

*இல்லங்களில் நிகழும் பாரம்பரியங்களும்
பல்வேறு சம்பிரதாயங்களும் நிறைந்த
வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்தும்
பல்வகை நிகழ்வுகளும் உள்ளன..*

**நிகழ்வுகள் தொடரும்..**



சோலையூர் குருபரன்



# குப்பை மேட்டு , காட்டு யானை பிரச்சினைகளுக்கு எப்போது நிரந்தர தீர்வு கிட்டும்

## பலத்த எதிர்பார்ப்புடன் பாலம்போட்டாறு மக்கள்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

எங்களது ஊரில் காட்டு யானைகளின் தொல்லை அதிகம் இதற்கான காரணம் குப்பை மேடுதான் குப்பைகளை கொட்டுவதை நிறுத்தக்கோரி பல ஆர்ப்பாட்டங்கள் செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை .பஸ் ஏறுவதற்காக காத்திருக்கும் போது இந்த குப்பைகளின் துர்நாற்றம் தாங்க முடியாது அது மட்டுமன்றி இங்கு பாதுகாப்பான யானை வேலி இல்லை இந்த யானை பிரச்சினையால் ஊருக்குள் நிம்மதிமாக வாழ முடியாது மாலை 5 மணிக்கே யானை ஊருக்குள் புகுந்து அட்டகாசங்களை மேற்கொள்வதுடன் எங்களது நெற்செய்கை விவசாயம் தோட்டச் செய்கைகளை அழித்து விடுகின்றன. கச்சான் போன்ற பயிர்களையும் துவம்சம் செய்து விட்டு செல்கின்றன. இந்த குப்பை கொட்டுவதனால் அங்குள்ள விலங்குகள் அதனை சாப்பிட்டு விட்டு ஊருக்குள் வருவதனாலும் பல தொற்று நோய்களும் ஏற்படுகின்றன இவ்வாறான வற்றில் இருந்து பாதுகாக்க குப்பை மேட்டை அகற்றி பாதுகாப்பான யானை வேலியினை அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொருளாளர் ஜீ.விதுர்சியா (வயது2%) தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம சேவகர் பிரிவே பாலம் போட்டாறு இதில் இக்பால் நகர்,பத்தினிபுரம் ஆகிய கிராமங்கள் காணப்படுகிறது இதனை அண்மித்த கண்டி திருகோணமலை பிரதான வீதியின் சிங்கபுர எனும் பகுதியில் தம்பலகாமம் பிரதேச சபை மூலம் கொட்டப்படும் குப்பைகள் மூலமாக பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக துர்நாற்றம்,இதனை அண்டியே காட்டு யானை படையெடுப்பு போன்றனவும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.பிரதான வீதியின் அருகே கொட்டப்படும் குப்பைகளால் இவ்வாறு பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்வதுடன் அவ்வீதி ஊடாக பயணிக்க முடியாத துர்நாற்றம் ஏற்படுவதாகவும் அப் பகுதி கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருட காலமாக இங்கு கழிவு குப்பைகள் கொட்டப்பட்டு குப்பை மேட்டாக மாறியுள்ளது இங்கு பிரதேச சபை மூலமான குப்பை மட்டுமல்ல வீதியால் செல்லும் தனியார் வாகன போக்குவரத்துதாரிகளும் குப்பைகளை வீதி அருகே கொட்டி விட்டு செல்கின்றனர் இதனால் அதனை தேடி யானைகளும் படையெடுப்பதுடன் குறித்த யானைகள் ஊருக்குள் புகுந்து மக்கள் சொத்துக்களை நாசமாக்கி விட்டு செல்கின்றன. விவசாயத்தை நம்பியே வாழும் இம் மக்களின் தோட்டப் பயிர்ச் செய்கைகளை அழித்து விட்டு செல்வதாகவும் இங்கு வாழும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பத்தினிபுர கிராமத்தில் தோட்டச் செய்கையில் அதிகமாக ஈடுபட்டு வருகிறோம் இதனை நம்பியே வாழ்வாதாரத்தை மேற்கொள்கிறோம் ஆனால் யானை தொல்லையால் பெரும் நஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளோம் இதனால் நிரந்தர யானை வேலியினை அமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்



தங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதாக இருந்தால் அச்சத்துடனேயே அனுப்ப வேண்டியுள்ளது சுமார் 4கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பலகாமம் பகுதிக்கு பிள்ளைகள் வகுப்புகளுக்கு சென்று வர வேண்டும் இதனால் யானை வந்திடுமோ என்ற பயம் எமக்குள் வீடு வந்து சேரும் வரை மனது படபடக்கிறது இது இவ்வாறு இருக்க இப்பகுதியில் ஜெயபுரத்தில் குப்பை மேடு உள்ளது இதனை அண்டியும் பிரதான வீதியை கடந்தும் எங்கள் ஊருக்குள் யானை வருகிறது அருகாமை கிராமத்தில் உள்ள விலாங்குளம் பகுதியில் யானை வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டதை போன்று நிரந்தரமான பாதுகாப்பான யானை வேலியினை அமைத்து தாருங்கள் என பாலம்போட்டாறு பத்தினிபுரத்தை சேர்ந்த தோட்டச் செய்கையில் ஈடுபடும் பெண்ணான டி.விஜயபாரதி வயது(48) தனது உளக்குமுறல்களை வெளிப்படுத்தியிருந்தார்.

பல வருட காலமாக மக்கள் ஆரம்பம் முதல் இந்த கிராமத்தில் நெற் பயிர்ச் செய்கை,தோட்டச் செய்கைகளான கத்தரி,வெண்டி,மரவள்ளி,கச்சான் உட்பட பல மேட்டு நிலப் பயிர்களையும் செய்து தங்களது வாழ்வாதார தொழிலாகவும் இலாபமீட்டி வருகின்றனர் ஆனால் இதனை பாதுகாப்பது அவர்களுக்கு சவாலான விடயமாகவே உள்ளது .தினமும் இந்த யானை தொல்லையால் நிம்மதியாக தூக்கமின்றியும் குடியிருப்பு பகுதிக்குள் யானை வருமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது யானை தாக்குதல் மூலமாக கடந்த 2022 ம் ஆண்டில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டுக்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளதுடன் 5க்கும் மேற்பட்ட யானைகளும் உயிரிழந்துள்ளன. காட்டு யானைகளானது குப்பை மேட்டினை நோக்கி பகலிலும் இரவிலும் படையெடுக்கின்றன. இங்கு கொட்டப்படும் குப்பைகளில் பொலித்தின் போன்ற உக்க முடியா பொருட்களும் காணப்படுவதுடன் இதனால் சூழல் மாசடைவினையும் ஏற்படுத்துவதுடன் ஒரு வகை துர்நாற்றம் மூலமாக தொற்று நோய்களும் ஏற்படலாம் பிரதான வீதியில் பஸ் தரிப்பிடத்தில் பஸ்



சுக்காக காத்திருக்க முடியாது அவ்வளவு துர்நாற்றம் வீசுகிறது இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பல முறை மக்கள் சுட்டிக்காட்டியும் பயனளிக்கவில்லை .பாதுகாப்பற்ற யானை வேலியின்மை மக்களை மேலும் இந்த காட்டு யானை தொல்லை மூலமாக பயம் ஏற்படுகிறது.

கடந்த வருடம் 2500 மரவள்ளி நாட்டி அதனை யானைகள் அழித்து விட்டன இதனால் பாரிய நஷ்டம் அடைந்துள்ளது யானைக்கு வெடி வைக்கவா முடியும் இல்லையே இதனை கட்டுப்படுத்தி தாருங்கள் மேலும் குப்பை மேட்டினால் தான் இந்த யானை எங்களது ஊரை நோக்கி ஊருக்குள் படையெடுத்து பயிர்களையும் நாசமாக்குகிறது என விவசாயியான எஸ்.விஜயகுமார் வயது (52) தெரிவித்தார்.

மக்கள் தங்களது உயிரை துச்சமென மதித்து பல போராட்டங்களுக்கு மத்தியில் யானை மனிதன் மோதல் என்ற சவாலுக்குள் முகங்கொடுத்து வாழ்கின்றார்கள். இயற்கை இனங்களின் விலங்கினங்களை பாதுகாப்பதும் பொறுப்பாகவுள்ளது ஆனாலும் இந்த மனித யானை மோதல் முடிவுக்கு வருவதென்பது கடினமான ஒன்றாகும்.



இக் காட்டு யானை தொல்லையில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும் என்பதே இப் பிரதேச மக்களின் கோரிக்கையாக உள்ளது இருந்த போதிலும் பாதுகாப்பான யானை வேலி இன்மை குறைபாடாக உள்ளதுடன் வனஜீவராசிகள் திணைக்களம் மூலமாக அமைக்கப்பட்ட அநேகமான வேலிகள் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பின்றியும் காணப்படுகிறது .

இரவில் குடியிருப்பு பகுதிகளில் பயிரினங்களை பாதுகாப்பதா நிம்மதியாக தூங்குவதா என்ற வினா இப் பிரதேச மக்களின் கனவுகளாகவே கலைந்து செல்கின்றது.

இந்த குப்பை மேட்டு மூலமாகவே யானை ஊருக்குள் ஒருவதுடன் குப்பைகளை கொட்டுவோர் வீதியின் அருகே கொட்டி விட்டு செல்கின்றனர் தம்பலகாமம் முழுவதுமாக சேரும் கழிவுகளை இங்கு கொட்டுவதனால் அதிகமான நாய் இனங்களும் பெருக்கமடைந்து காணப்படுகிறது இதனால் சில வேலைகளில் இறந்து வீதிகளில் காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகிறது எனவே எங்களுக்கான பாதுகாப்பான யானை வேலி தேவை என்பதுடன் குப்பை மேட்டை அகற்ற வழி செய்யுங்கள் இந்த கிராமத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் இருவர் காயமடைந்துள்ளனர் பலரை காட்டு யானை துரத்தியுள்ளது. எங்கள் கிராமம் பனை மரங்களை அதிகம் கொண்ட பகுதி இதனை நோக்கி சாப்பிடுவதற்காக யானை ஊருக்குள் வருகிறது இதனால் இரவு நேரங்களில் வெளியில் இறங்க முடியாது பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறோம் பாலம்போட்டாறு ஜெயபுர பகுதியின் ஒரு பகுதி ஊடாக யானை வேலா காணப்பட்டாலும் எமது கிராமத்துக்கான பாதுகாப்பான வேலி இல்லை இது தொடர்பில் பல முறை பிரதேச சபைக்கு கடிதம் மூலமான கோரிக்கை செய்யப்பட்டும் பலன் கிட்டவில்லை இந்த குப்பை மேட்டு பிரச்சினை, யானை தொல்லைகளில் இருந்தும் பாதுகாப்பு பெற்றுத் தாருங்கள் என பத்தினி புர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எஸ்.கௌரி தனது கருத்தை உரத்த குரலில் வெளிப்படுத்தினார்.

மக்கள் இது தொடர்பில் போராட்களை முன்னர் தீர்வு வேண்டி நடாத்தியிருந்தாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடாக காணப்படுகிறது.

குப்பை மேட்டினால் ஓரிரு பிரச்சினைகள் மாத்திரமல்ல ஒட்டு மொத்தமாக சூழல் மாசடைவு உட்பட பல பாதகமான தாக்கங்களை உண்டுபண்ணுகிறது இதனால் அதன் ஊடாக பயணிக்கும் பாதசாரிகள் அதனை அண்டியுள்ள குடியிருப்பு பிரதேச மக்களும் பாதிக்கப்படலாம். இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வின்றியே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் .யானை மனித மோதல் ஏற்கனவே இருந்து வந்தாலும் குப்பை மேட்டினால் மேலும் இக் காட்டு யானை தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

எனவே இம் மக்களின் பிரச்சினைகளாக யானை தொல்லை,குப்பை மேட்டை அகற்றுதல் தொடர்பில் எப்போது தீர்வு கிட்டும் என இம் மக்களின் ஏகோபித்த ஒரே ஒரு எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.







# சுவிஸில் தமிழ் எழுத்தாளர் விக்கி நவரட்ணம் எழுதிய நூல்களின் வெளியீடு







சுவிஸில் தமிழ் எழுத்தாளர் விக்கி நவரட்ணம் எழுதிய நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

தமிழர்கள் சுவிஸுக்கு வந்து வாழ ஆரம்பித்து சுமார் 41 ஆண்டுகள் என்கிறது புள்ளிவிபரம்.

எழுந்தாளர் விக்கி நவரட்ணம் அவர்கள் 39 ஆண்டுகளாகச் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருகிறார்.அவர் வாழும் Wallis மாநிலம் புகழ்வாய்ந்த அல்ப் மலைகளால் நிறைந்தது,Zermatt,matterhorn என்பன இத்தாலியை எல்லையாகக் கொண்டுள்ள சுவிஸ் மலைகளாகும்.

இந்த மாநிலத்துக்கு 1984 ம் ஆண்டு இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து முதன் முதலாக வருகை தந்த முதல் தமிழ்மகன் விக்கி நவரட்ணம் அவர்கள் தான் என்கிறது பதிவுகள்.

மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையான விக்கி நவரட்ணம் %4 வயது நிரம்பிய புகழ்பூத்த எழுத்தாளர்.

தனது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டு,அன்பு மனைவியுடன் மகிழ்சியாக வாழ்ந்துவரும் இவர் ,படைத்த சிறுகதைகளும்,கவிதைகளும் புலம்பெயர்தலைக்,காதலைக்,களத்துக்கும்,புலத்துக்குமான இடைவெளியை,நல்லுறவுகளைப் பற்றியெல்லாம் நிறையப் பேசுகிறது.கடந்த நாற்பதாண்டுகால வாழ்வின் வலிகளும்,சுமைகளும்,கண்ணீரும்,துயரங்களும்,ஏன் சில மகிழ்ச்சிகளும் விக்கி நவரட்ணத்தின் படைப்புகளாகின்றன.

வீரகேசரி,காற்றுவெளி,இனிய நந்தவனம் போன்ற பத்திரிகைகளில் அடிக்கடி இடம்பெறும் சிறுகதைகள், வாசல் வந்த கங்கை எனும் நூலாகவும்,கவிதைகள் மனதுக்குள் உறங்கும் மௌனம் எனும் நூலாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிச்டூடிண் மாநிலத்தில் குடிணிண நகரில் வெளியிடப்பட்டது.

விக்கி நவரட்ணம் ஏற்கனவே ஆகாய கங்கை

கண்களில் ஏன் அந்த கங்கை எனும் இரண்டு நூல்களுடன் மொத்தம் நான்கு நூல்களைச் சுவிற்சர்லாந்திலிருந்து படைத்துத் தமிழுக்குத் தந்துள்ளார்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் சுவிஸின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்து நூல்வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

சுவிற்சர்லாந்தில் முதன் முதலாக சிறுகதை நூலை வெளியிட்ட எழுந்தாளர் முனைவர் நாகேஸ்வரன் அருள்ராசா(கலாநிதி கல்லாறு சதீஷ்) தலைமையில் நடைபெற்ற இந்த நூல்வெளியீட்டு விழாவில்,தமிழ் ஆசான் பூநகரியான் முருகவேள் பொன்னம்பலம்,ஒலிம்பிக் நகரான லவுசான் மாநகராட்சியின் உறுப்பினர் தம்பிப்பிள்ளை நமசிவாயம்,பட்டிமன்றப்பேச்சாளர் வித்தகன் சுரேஷ் செல்வரட்ணம்,எழுத்தாளர் சண் தவராசா,சுயாதீன ஊடகவியலாளர் அமரதாஸ்,எழுத்தாளர் பிறேமினி,எழுத்தாளர் ஜெயந்தி ஜீவா,தமிழ்க்குரு பாலகுமார் இரத்தினசபாபதி ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

திரு.ரஜனிகாந்த் நிகழ்சிகளை தொகுத்து வழங்கினார்.

கலாநிதி கல்லாறு சதீஷ் தனது தலைமையுரையில்;

வைகாசிமாதம் என்பது வலிமிகுந்த மாதம்,தமிழ் நூல்களை அதிகம் வெளியிடுவதற்கு மிகவும் உகந்த மாதம் இந்த மாதம்தான்,ஏனென்றால்,அன்று இழந்து போன அந்தத் தூண்களுக்கு நிராக நிற்கப் போவது இனி இந்த நூல்கள்தான்.

சங்க கால நூல்களும்,சங்கம் மருவிய கால நூல்களும்,காலக்கண்ணாடியாக இருப்பதுபோல் நவீன புலம்பெயர்தேசத்தின் காலக் கண்ணாடியாக இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தபோதும் விக்கி நவரட்ணம் அவர்களின் ஒரு வாசல் வந்த கங்கையும் இருக்கலாம்.

மேலும் அவர் தனதுரையில்;

இன்று அன்னையர் தினம்,மாதம் வலி சுமந்த வைகாசி இரண்டு நினைவுகளாகவும்,இரண்டு நூல்களைப் படைத்துள்ளார்,கவிதை நூலைத் தனது தாய்க்கு அர்ப்பணம் செய்தவர்,சிறுகதைகளுக்கு வைத்த தலைப்புகளே கவிதைகளாக இருக்கின்றன,அவர்தம் சிறுகதைகளின் தலைப்புகளை எடுத்து அவருடைய தாயாருக்கு நானொரு கவிதை படைத்துள்ளேன் என்றவர்

பின்வரும் தலைப்புகளால் உருவான கவிதையினை வாசித்தார்.

அம்மாவின் ஞாபக வெளிகளில்-ஒரு
இளநதி நகர்கிறது.
இறக்கை இழந்த ஊசல் போல்
என்மனம் பறக்கிறது.
தூரத்திலிருந்தாலும்-தாயே
நெஞ்சோரத்தில் உன்நினைவு.
நினைவுகள் உருகிவரும் நெஞ்சிற்குள்
உதிரக்கண்ணீர்.
மௌனத்தில் புதைந்த கவிதைகளாக
மனதிற்குள் உறங்கும் உன் நினைவுகள்.
இந்த சோகங்களின் நதிமூலம் எது?
காத்திருந்த வைகறைக்குக்
கண்கொடுத்த பெரும் மேகமா?-அல்லது
திசை தவறிச் சென்ற இந்தச் சிறுமேகமா?
வாழ்வதற்கு வானமில்லாத வானவில்-நான்
நீயோ-மேகங்களுக்கிடையில் தூங்கும் நட்சத்திரம்.
நன்றி சொல்ல என்னிடம் வார்த்தையில்லை.
பாசத்தின் ஊற்றுக் கண் திறந்தது.
தூதுவிட்ட மனம் மழையில் நனைந்தது
இருள் விலகிய இதயங்களில் கண்ணீர்
கவலை என் கண்களில் கண்ணீரைத்
தெளித்தது
தாயே அதுவே இங்கே
என் வாசல் வந்த கங்கை.

என்று கவிதையை முடித்தார்.

நூல்வெளியீட்டு நிகழ்வில் எழுத்தாளர் விக்கி நவரட்ணம் 1750.- சுவிஸ் பிராங்குகளை அறக்கொடையாக வழங்கினார்.

சுமார் ஆறு இலட்சம் இலங்கை ரூபாய்கள் பல்வேறு வழிகளில் தாயக உறவுகளுக்கு உதவும் விதத்தில் இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது.

